787

கண்ணன்

1-2-58
13 ந. பை

787
1-58
...CE OF THE REGISTRAR OF BOOKS
18 FEB 1958
...ADRAS



மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி

தஞ்சை மாவட்டத்திலேயே சிறந்த பள்ளிக்கூடமாகக் கருதப் படுகிறது மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி. ஆண்டுதோறும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சிபெறும் மாணவர் எண்ணிக்கை மாகாணத்திலேயே முதல் மூன்று ஸ்தானங்களுக்குள்ளாக நிற்கிறது. இந்தப் பள்ளியின் 83-ஆம் ஆண்டு விழாவை இந்தப் பிப்ரவரி 8, 9, 10 தேதிகளில் கொண்டாட நகர மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள். டாக்டர் சர். ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் இந்தச் சதாபிஷேக வைபவத்துக்குத் தலைமை வகிக்கிறார்.

மாயூரம் நகராட்சி 1865-இல் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுதிலிருந்தே இந்தப் பள்ளி ஆரம்பமாகி நடந்து வந்திருப்பது தெரிகிறது. நாளடைவில் 1875-இலிருந்து 1892-க்குள் இது உயர்நிலைப்பள்ளியாக வளர்ந்து புதிய கட்டடங்களும் இதற்கு ஏற்பட்டன என்று தெரிகிறது.

பள்ளியின் முன்னேற்றத்தில் டாக்டர் ரங்காச்சாரி, வேதநாயகம் பிள்ளை போன்ற புகழ்மிக்க பெரியார்கள் அக்கறைகாட்டி அதை வளர்க்கப் பணி புரிந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார், பிரபல எழுத்தாளர் கா. சி. வேங்கடரமணி, பிரபல ஆசிரியர் கல்கி முதலிய புகழ்பெற்ற பிரமுகர்கள் இந்தப் பள்ளியில் படித்த மாணவர்களே. மகா கனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்கள் இப்பள்ளியில் சிலகாலம் பணி புரிந்திருக்கிறார். மேலும் பல பழைய மாணவர்கள் அரசாங்கத் துறையிலும் பொதுவாழ்விலும் உயர்நிலை பெற்று இப்பொழுதும் விளங்குகிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சிக்கு உழைத்த நகரசபைத் தலைவர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பெருமக்கள் ஆகியோர் நம்முடைய நன்றிக்கும் பெரு மதிப்புக்கும் உரியவர்களாவார்கள்.

சதாபிஷேக விழாவை ஒட்டி ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமும் வசதிகளும் செய்ய முடிவாகியிருப்பதால், பழைய மாணவர்கள், புதிய மாணவர்கள் ஆகிய அனைவரும் இதற்குப் பண உதவி செய்யலாம். அன்பளிப்பை ஸ்ரீ வி. சாமி ஐயங்கார், பொக்கிஷார், மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி சதாபிஷேகக் கமிட்டி, பட்டமங்கலத் தெரு, மாயூரம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன்.

—என். ராமகிருஷ்ணா, பழைய மாணவன், மாயூரம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 9 **இதழ்: 3**

1-2-'58

குழந்தைகளே! பக்கம் 2
காளிகோட்டை ரகசியம் 3
பேயாவது பிசாசாவது! .. 9
கொடுக்கும் தெய்வம் .. 14
நீங்களும் நானும் .. 19
பொங்கல் வந்ததே! .. 21
யார் இந்த....? .. 22
கறுப்புக் கண்ணாடி .. 25
கடற் புலி .. 31
அட்டைப் படம்:
ஏ. வி. ராமமூர்த்தி
மாயூரம் ஹைஸ்கூல்
2-ஆம் அட்டை
கிளைக் கழகம்; 3-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

செய்திகள்!

வளரும் எழுத்தாளர் சங்கம், திருச்சி

சங்கத்தின் சிறப்புக் கூட்டம் திரு அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. பிரபல எழுத்தாளர் திரு ஏ. எஸ். ராகவன் அவர்கள் 'வளரும் இலக்கியம்' என்பது பற்றிப் பேசினார். தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்தும் திருப்பராய்த்துறையிலிருந்தும் வந்திருந்த அங்கத்தினர்கள் அறிமுகம் செய்விக்கப்பட்டார்கள்.

மயிலையில் சிறுவர் நாடகம்

பொங்கல் திருநாளை முன்னிட்டு, மயிலை மாதவபுரம் சிறுவர் சங்கத்தின் சார்பில் 'நிரபராதி' என்ற நாடகம் நாட்டு வீராச்சி முதலித் தெருவில் நடைபெற்றது. குமரகுரு, மகாதேவன், பாலசுப்பிரமணியன், சந்தானம், மாதவன், மணி ஆகியோர் சிறப்பாக நடித்தனர். கௌரிசங்கர் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த நாடகத்தை கா. தே. சங்கரநாராயணன் அவர்கள் பாராட்டிப் பேசினார்.

குமாரி கங்காவின் நடனம்

பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலையின் எஞ்சினியர் எஸ். ஜி. ஐயர் அவர்களின் புதல்வியும் கண்ணன் கழக அங்கத்தினருமான குமாரி கங்கா கோபாலபுரம் சங்கீத சபாவில் சிறப்பாக பரத நாட்டியம் ஆடி, சென்னைவாழ் ரசிகர்களின் பாராட்டை அமோகமாகப் பெற்றாள். முன்பு செயின்ட் மேரீஸ் ஹாலில் நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றதைக் கண்ணன் வாசகர்கள் அறிவார்கள். எஸ். கே. காமேச்வரன் அவர்களின் சிஷ்யையான குமாரி கங்காவின் பரத நாட்டியம் கலைச் சிறப்பும் உயர்வும் கொண்டிருப்பதால் மேலும் புகழ்பெற்று விளங்குவாள் என்று வாழ்த்துகிறோம்.

குழந்தைகளே!

கண்ணன் உங்கள் உள்ளத்தைக் கவர்ந்த பத்திரிகை. உங்களுடைய பொது அறிவு வளரத்தக்க முறையிலும் அதே சமயத்தில் உங்கள் பொழுது போக்குக்கு உறுதுணையாகவும் கண்ணன் சிறப்பாக, ஆனால் அடக்கமாகப் பணியாற்றி வருகிறது.

கண்ணனிடம் உங்களுக்குள்ள அன்பை உங்கள் கடிதங்கள் மூலம் அவ்வப்போது அறிந்து, ஓரளவு உற்சாகமும் பெருமையும் கொள்கிறோம். இன்னும் சிலருக்கு உள்ள மனக் குறையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். மனக்குறை என்ன; பணக் குறைதான் அது. அவர்களால் கண்ணனை விலைக்கு வாங்கிப் படிக்க முடியவில்லை. பெற்றோர்கள் வாங்கித்தர முன் வராததே காரணம்.

தமிழ் நாட்டுக் குடும்பங்களில் கண்ணன் பத்திரிகை முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. ஏனெனில் கண்ணன் சிறந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியாகிறது. பிரபலமான ஆசிரியர்களும் பிரமுகர்களும் சிறந்த எழுத்தாளர்களும் கண்ணனில் அவ்வப்போது எழுதி வருகிறார்கள். குழந்தைகளுடைய திறமையை உருவாக்கும் பற்பல பகுதிகள் கண்ணனில் வெளிவருகின்றன. ஆயினும் சில பெற்றோர்கள் இதைக் கவனிக்கவில்லை தங்கள் குழந்தைகள் எதைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது என்றும் அவர்கள் கவனித்துப் பார்ப்பதில்லை. பார்த்தால் கண்ணன் பத்திரிகை சிறுவர்களுக்குச் செய்து வரும் தொண்டு எத்தகையது என்பதை அறிந்துகொள்வார்கள். அப்படி இதுவரையில் கவனிக்காத பெற்றோர்களுக்கு நீங்கள்தான் தூண்டுகோலாக இருக்க வேண்டும். கண்ணனை அவர்களிடம் கொடுத்துப் பார்க்கச் சொல்லுங்கள். அவர்கள் படிக்கட்டும்; முடிவு செய்யட்டும். அவர்கள் யோசனைகள் ஏதாவது கூற விரும்பினால் அதையும் எங்களுக்கு எழுதட்டும். எப்படியோ கண்ணன் குழந்தைகள் உலகில் அரிய பணி புரிய அனைவரும் உதவ வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை.

வளரும் எழுத்தாளர்களின் அறிமுகத்தைக் கண்ணனில் இந்த ஆண்டுத் துவக்கத்தில் தொடங்குவதாகக் குறிப்பிட்டிருந்தேன். பலர் தீபாவளி சமயத்தில் தங்கள் படங்களை மட்டுமே அனுப்பி, விவரங்களை அனுப்பாமல் விட்டுவிட்டார்கள். படங்கள்கூட ஒரே அளவாக இல்லாமல் வெளியிடுவதும் கஷ்டமாக இருந்தது. சிலர் படங்களைத் தாமதித்து அனுப்பினார்கள்.

எனவே வளரும் எழுத்தாளர்கள் தங்களைப் பற்றிய குறிப்புக்களை உடனே விவரமாக எழுதி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முன்பு படம் அனுப்பியவர்கள்கூட முடிந்தால் இப்போது 'பாஸ் போர்ட்' அளவுள்ள புகைப்படங்களையே அனுப்பினால் மிகவும் நலமாக இருக்கும். அடுத்த இதழிலிருந்தே வளரும் எழுத்தாளர்களின் அறிமுகப் பகுதியை ஆரம்பிக்கலாம் என்பது என் எண்ணம். ஆகவே புகைப் படங்களும் விவரங்களும் சரிவர எழுதி விரைவில் அனுப்பித்தர வேண்டுகிறேன்.

காளிகோட்டை ரகசியமும் பரிசுபெற்ற தொடர்கதை கறுப்புக் கண்ணாடியும் தொடக்கத்திலேயே உங்கள் கருத்தைக் கவர்ந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். அடுத்தடுத்து விறுவிறுப்பும் சுவையும் நிறைந்த பல பகுதிகளை நீங்கள் அந்தக் கதைகளிலே காணலாம்.

—ஆசிரியர்.

காளிகோட்டை ரகசியம்

'ஜனா'

4. யார் இந்தக் காளை?

மின்னல் ஒன்று மின்னி மறைவதுபோல் இளம் வீரனின் மூளையில் யோசனை ஒன்று பளிச்சென்று தோன்றிச் சென்றது.

“தம்பி, தயங்காதே! வெள்ளத்தோடு போய் மரத்தின் கிளையொன்றைப் பிடித்துக்கொள்வோம்!” என்று அவன் தத்தளித்துக்கொண்டே தைரியம் கூறினான். வேங்கையாரின் கருணையற்ற கணைச் சரங்கள் இந்தச் சமயம் பார்த்துக் கரையிலிருந்து சீறிச் சீறி வந்தன. இவர்களுக்கு நேரவிருந்த ஆபத்தைக் கண்டு, அவர்கள் கரையிலிருந்தவாறே ஆனந்த ஆரவாரம் செய்தார்கள். இயற்கையின் சீற்றத்திலே இரு இளம் உள்ளங்கள் துரும்புபோல் தவித்தன. இவர்களுடைய தவிப்பைக் கண்டு துஷ்டக் குழந்தைபோல் வேங்கையார் புரவியிலிருந்தவாறே துள்ளிக் குதித்தார். கடகடவென்று இடி முழக்குவதுபோல் கைகொட்டி நகைத்தார்; நையாண்டி செய்தார்.

உயிருக்குப் போராடும் அந்த இளைஞர்கள் இப்போது வெள்ளத்தோடு போவது தெரிந்தது. கப்பும் கிளையும் வேரும் அடி மரமுமாக விரைந்து வந்த காட்டு மரத்தின் வேகம் சிறிது மிஞ்சிவிட்டது.

ஆனால் நடப்பது என்ன?

வீரனும் சிறுவனும் மடுவின் சரிவில் சிக்கிக்கொள்ளு முன்பே, மரத்தின் கிளைகளைப் பற்றிக்கொண்டு விட்டார்கள். எல்லாம் எத்தனை சுருக்கு!

அவர்கள் கிளை ஒன்றைப் பற்றிக்கொண்ட சுருக்கும், கிளை உயர்ந்து கிளம்பி மடுவில் நோகாமல் சரிந்து விழுந்த சுருக்கும்-

எல்லாம் 'கரணம் தப்பினுல் மரணம்' என்று பயிலும் பயங்கர விளையாட்டைப் போலிருந்தது.

வேங்கையாருக்கும் அவர் குழுவினருக்கும் அதற்குமேல் என்ன நடந்தது என்று விளங்கவில்லை. அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதும் தெரியவில்லை. எப்படித் தெரியும்? மடுவில் புரண்டு விழுந்த மரம் தண்ணீருக்கு மேலே மீண்டும் தோன்றுவதற்குப் பல விநாடிகள் பிடித்தன. அதையும் தவிர, விழுந்த இடத்துக்கு வெகுதூரத்துக்கு அப்பால்தான் மரம் வெளியே கண்ணுக்குத் தெரிந்தது. அவர்கள் வெகு தூரம் கரையில் பின் தங்கி விட்டார்கள். மரத்தின் கிளைகள் தெரிந்த இடத்தில் வீரனையும் காணோம்; வீரனோடு சென்ற சிறுவனையும் காணோம்!

''தொலைந்தார்கள் படுவெட்டுக் காளைகள்! யாரிடம் இந்த விளையாட்டெல்லாம்! ஹஹ்ஹஹ்ஹா! விறளிமலை மடுவிடமா விளையாட்டு! ஹோஹ் ஹோஹோ!'' என்று ஆற்றின் கரை யிரண்



டும் எதிரொலியால் அதிரும்படி அவர் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரித்தார்.

மடுவுக்கு அப்பால் ஆற்றின் வேகம் இன்னும் அதிகமாக இருந்தது. கண்ணுக்குத் தெரியாமல் மறைந்த அந்த இருவருடைய சடலங்களும் சற்றைக்கெல்லாம் வெள்ளத்திலே மிதந்து, கரையோரமாக ஒதுங்கி வரலாம் என்ற எண்ணம் உதிக்கவே அவர் சிரிப்பதை விட்டுவிட்டு, தம் ஏவலாட்களைப் பார்த்து, ''என்னடா தடி மாடுகள் மாதிரி நிற்கிறீர்கள்! உம்; குதிரையைத் தட்டுங்கள்! இருள் மூடுகிற வரையில் கரையோடு துரத்திச் செல்லுங்கள்!'' என்று கடுங் குரலில் கட்டளையிட்டார்.

அவருடைய உற்சாகம் திடீரென்று ஆற்று வெள்ளத்தைக்





காட்டிலும் கரை புரண்டு வரவே, ''டேய்! இதோ பாருங்க
ளடா! எவன் அவர்களுடைய உடலை முதலில் கண்டு பிடித்துச்
சொல்கிருனே அவனுக்கு ஒரு வராகன் வெகுமதி உண்டு!''
என்று கையிலிருந்து சாட்டையை எடுத்துச் சொடுக்கினர்.

வேங்கையார் குழுவினரின் குதிரைகள் ஆற்றின் இறக்கத்தி
லிருந்து சாலையில் ஏறிச் சென்றன. வேங்கையாரின் சிரிப்பே
அவர்களைச் சிடுசிடுவென்று விரட்டிக்கொண் டிருந்தது. பயமும்
சோர்வும்கொண்ட அவர்கள் கண்களுக்கு முன்னே ஆயிரமாயி
ரம் கேள்விக் குறிகள் குதித்துக்கொண் டிருந்தன. காளி
கோட்டையின் காவலரான வேங்கையார் கேவலம் அந்த அற்பச்
சிறுவனிடமும் அந்த இளம் வீரனிடமும் இவ்வளவு பகையும்
வன்மமும் பாராட்டுவானேன்?

யார் அந்தச் சிறுவன்?

யார் அந்த இளம் காளை? எங்கிருந்து இந்தக் காட்டில்
வந்து முளைத்தார்கள் இவர்கள்?

யார் இந்த அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன்?

இதே கேள்விதான் கிட்டத்தட்ட இதே சமயத்தில் நாணற்
புதரருகே குளிரால் வெடவெடக்க நின்ற சிறுவன் மனத்திலே
புரண்டுகொண் டிருந்தது. படுகையில் வளர்ந்த போத்துப்
போல் மொழு மொழுவென்று நின்ற இளங்காளை இத்தனைக்கும்
அவன் பக்கத்தில்தான் புதரருகே பதுங்கி நின்ருன். ஆபத்தைக்
கண்டு சிறிதும் அஞ்சாத நெஞ்சமும் வைரம் போன்ற உறுதியும்
காட்டும் அவன் தோற்றத்திலே மயங்கிப் போய் மலைத்து
நின்ருன் அந்தச் சிறுவன்.

ஆம்; மரத்தோடு மடுவிலே பாய்ந்த இளைஞர்கள்தான் அந்தப் புதரிலே இப்போது பதுங்கிக்கொண்டு நின்றார்கள். ஆபத்தில் அவர்களைத் தள்ளிய அந்தக் காட்டு மரமே அந்த மடுவின் செருகலில் அவர்களைச் சிக்கவைக்காமல் அவர்கள் உயிரை மீட்டுக் கொடுத்துவிட்டது. சிறுவன் தன்னை இரண்டாம் முறையாகக் காப்பாற்றி விட்ட அந்த இளம் வீரனின் சமயோசித அறிவைக் கண்டு, வியந்து வாயடைத்துப் போனான்.

சிறுவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பது அந்த வீரனுக்கு ஏதோ சிறிது கூச்சமாக இருந்தது. அவன் வேறு எங்கேயோ கவனிப்பவன் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்பவன் போல் பாவனை செய்துகொண் டிருந்தான்.

''கட கடக், கடகடக், கடகடக்!'' குதிரைகளின் குளம்படிச் சத்தம் ஒரே சீராகக் கேட்கத் தொடங்கியது. வர வர, சத்தம் அவர்கள் இருக்கும் இடத்துக்குச் சமீபமாக நெருங்கி வந்தது. வீரனும் சிறுவனும் வெளியில் இருப்பவர்கள் தங்களைக் கண்டுகொள்ள முடியாதபடி மறைத்துக்கொண்டு செடிகளை லேசாக விலக்கி, அங்கிருந்தவாறே சாலையைக் கவனிக்கலானார்கள்.

அவர்கள் வேங்கையார் குழுவினர்தான். மரங்கள் அடர்ந்த பகுதியிலிருந்து அவர்கள் சாலையின் வளைவுக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆற்றின் நடுவே இருந்த வெளிச்சத்தில் பாதிகூட சாலையில் காணோம். இருள் நன்றாகப் பரவத் தொடங்கிவிட்டது.

வேங்கையாரின் உற்சாகமும், வெகுமதி தருவதாகக் கூறிய உறுதி மொழியும் பிறருக்கு வேதனையைத்தான் அளித்தன. ஆயினும் யாரும் எதிர்மொழி கூறாமல் ஆற்றின் கரையையே ஆராய்ந்துகொண்டு வந்தார்கள்.

''இருட்டிவிட்டது, மகாராசா! கரை கண்ணுக்குச் சரியாகத் தெரியவில்லை!'' என்று முன்னால்வந்த ஒருவன் கூறும் குரல் கேட்டது.

அடுத்த கணம் 'சுளீர்' என்று வேங்கையார் சொடுக்கிய சாட்டையின் நுனி அரவின் நாக்குப்போல் அவன் உடலைத் தீண்டிப் பதம் பார்த்தது.

அவன் நெளிந்து கொடுத்தான்.

"கண் தெரியாத குருட்டு எருமைக்கு வேட்டையிலே என்னடா வேலை?'' என்று அகங்காரத்தோடு உறுமினார் வேங்கை யார்.

அவர்கள் அந்த இடத்தைக் கடக்கும்போது சிறுவன் பயத் தினால் வீரனை அணைத்துக்கொண்டு நின்றான். ஆதரவோடு அவன் முதுகில் தட்டிக் கொடுத்துக்கொண்டே, ''பயப்படாதே தம்பி! அவர்களால் நம்மைப் பார்க்க முடியாது. நம்முடைய உடல் எங்கேயாவது ஒதுங்கியிருக்கிறதா என்று தேடிக்கொண்டு போகிறார்கள் அந்தப் புலிகள்!'' என்றான் வீரன்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு, சிறுவன் வாயைப் பிளந்து கொண்டு நின்றான். அவன் பக்கத்தில் இருப்பதே அவனுக்குப் பெரிய தைரியமாக இருந்தது.

''தம்பி! அதோ அந்தத் தோப்புக்கு நடுவே ஒரு காளி கோயில் இருக்கிறது; இல்லையா? அங்கே போய்விட்டால் நமக் குக் கவலையில்லை. இவர்கள் நம்மைத் தேடிக்கொண்டு அங்கே வரமாட்டார்கள்!'' என்றான் அந்த வீரன்.

அவன் கூறுவதைக் கேட்ட சிறுவன் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான். அந்தக் காட்டிலே அவன் நன்கு பழகிய வன்போல் இருந்தது அவன் பேச்சு. அப்படியிருந்தும் அவன் இதுவரையில் அவனைப் பார்த்திருப்பதாகத் தோன்றவில்லையே என்று எண்ணினான்.

''ஏன் அப்படிப் பார்க்கிறாய், தம்பி! இந்தக் காட்டுக்கு நான் புதியவன் என்றுதானே யோசிக்கிறாய்? எனக்கு எல்லாம் தெரியும். இந்த வேங்கையாரையும் தெரியும், இந்தக் காளி கோட்டைக் காட்டையும் தெரியும். இன்னும் சொல்லட்டுமா? உன்னைக்கூடத் தெரியும். உன்னை வேங்கையார் கண்டுவிட்டால் இனி உயிரோடு விடமாட்டார் என்பதும் தெரியும். போதுமா? வா, போகலாம்!'' என்று அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு புதரைக் கடந்து, சாலையைக் கடந்து, காளி கோயிலை நோக்கிக் குறுக்கு வழியாக நடக்கலானான் அந்த வீரன்.

அது அடிக்கடி நடந்து செல்லும் ஒற்றையடிப் பாதையைப் போல் இருந்தது. சிறுவனுக்குத்தான் சிறிது தடுமாற்றமாக இருந்ததே தவிர, அந்த வீரன் அடிக்கடி பழகிய பாதையில் நடப்பதுபோலவே தயங்காமல் விரைவாக நடந்து சென்றான்.

அவர்கள் மேட்டில் ஏறிய இடம் கோயிலின் பின்புறப் பகுதி என்பதைச் சிறுவன் நிதானித்துத் தெரிந்துகொண்டான். இடிபாடுகளும் இடையிடையே புதர்களுமாக அடர்ந்திருந்த அந்த இடத்தை அடைந்ததும் இளம் வீரன் சிறிது தயங்கி நின்றான். கோயிலின் முன்புற வாசலருகே வெள்ளையாக ஆடை அசைவதுபோல் தோன்றியதே அவனுடைய தயக்கத்துக்குக் காரணம்: வேலைவிட விரைவாகச் சென்ற அவனுடைய கூரிய பார்வையிலே, ஓர் உருவம் அவர்களை நோக்கி நடந்து வருவது தெரிந்தது.

(தொடரும்)

பேயாவது பிசாசாவது!

கா. சுந்தரி

அன்று எட்டாம் வகுப்பு 'ஏ' செக்ஷன் அறைக்குள் முதலாவதாக நுழைந்தவன் முரளி தான். அவனுக்கு அந்தப் பள்ளிக் கூடமும் புதிது; வகுப்பறையும் புதிதுதான். ஏனென்ருல் பள்ளிக் கூடம் தொடங்கிய நாளிலிருந்தே அவன் மட்டம். அப்பா அவனை அங்கே சேர்க்க வந்தபோதுகூட அவன் தன் வகுப்பறையை எட்டிப் பார்க்கும் பாவம் செய்யாமல் அவருடனேயே வீட்டுக்கு ஓடி விட்டான். அவனுடைய அப்பா ரொம்ப நல்லவர்!

போர்டுக்கு எதிரில் வாத்தி யாருக்குப் பக்கவாட்டில் உள்ள அந்த முதல் பெஞ்சியில் முதல் இடத்தில் தன் புத்தகப் பையை வைத்தான் முரளி. அந்த இடம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சீக்கிரம் வந்தது எவ்வளவு நல்ல தாகப் போயிற்று!

'டேய் யாரடா அது, என்னு டைய இடத்தில் உட்கார்ந்து கொண்டது? நான் இரண்டு வருஷமாக இதே இடத்தில் இருக் கிறேன். நீ என்னவோ ரொம்பச் சொந்தம் கொண்டாடுகிருயே!'' என்ற குரல் கேட்டு முரளி திடுக்

கிட்டான். நீல ஷர்ட்டும் காக்கி நிஜாரும் அணிந்த ஒரு சிறுவன் அவனை நோக்கிக் கோபமாக வந்து கொண்டிருந்தான்.

முரளி இயற்கையிலேயே மிகவும் தைரியசாலி! நீல ஷர்ட்டின் பேச்சில் ஏதோ ஹாஸ்யம் இருந் தாற்போலவும் அதை அப்போது தான் உணர்ந்தது போலவும் அவன் கலகலவென்று நகைத் தான். நீல ஷர்ட்டின் கோபம் அதிகரித்தால்கூட முரளிக்குப் பயம் கிடையாது. அவன் எல் லோருடனும் சண்டையிடத் தயார்!

''நீ இன்றைக்குத்தான் புதிசா வந்தாயா? என்னுடைய இடத்தில் யாரும் இவ்வளவு துணிச்சலாக உட்காரமாட்டார்கள். பரவா யில்லை. நான் உன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்'' என்று சாந்தமாகப் பேசினான் நீல ஷர்ட்.

முரளி அவனை நன்றாகக் கவனித் தான். நல்ல சிவப்பு நிறம். அமைதி தவழும் முகம். ஆனால் அந்தக் கண்கள்..ஏன் இப்படி ஒளியற்று, செத்த ஆட்டின் கண் கள் போலிருக்கின்றன? முரளிக் குப் பயமா? இல்லையே. ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் முரளி.

''மணி. ரங்கமணி வாத்தியார் தெரியாது உனக்கு? அவருடைய மகன்தான் நான்.'' அவன் வார்த் தைகளில் பெருமை தொனித்தது.

''ஓ..என் பெயர் முரளி. ஆமாம். எங்கள் வீட்டுக்கு அருகில் குடியிருக்கிற பையன்கள் யாராவது இந்தச் செக்ஷனில் படிக்கிறான்களா? எனக்கு..'' முரளி பேசி முடிக்கவில்லை. ''ஏன், லீவு லெட்டர் கொடுத்து அனுப்ப ஒரு ஆள் பக்கத்தில் இருக்கவேண்டுமா? நல்ல பையன் நீ'' என்று குறுக்கே பேசினான் மணி. அவனுடைய மனம் இவனுக்கு எப்படித் தெரிந்தது?

முரளி ஏனோ விழித்தான். ''உனக்குத் தெரிந்தால் சொல் லேன்!'' என்று மணியைக் கேட்டான். அவனோ விழுந்து விழுந்து சிரித்தான். அந்தச் சிரிப்பு..ஐயோ எவ்வளவு பயங்கர மாக இருந்தது! முரளிகூட, 'என்ன பையன் இவன்! இவன் இப்படி விசித்திரமாக நடந்து கொள்கிறானே' என்று மனத்துக் குள் நினைத்துக்கொண்டான்.

''ஏண்டா முரளி, எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் என்று தானே சொன்னாய்? உங்கள் வீடு எங்கே என்று எனக்குத் தெரி யுமா?'' மீண்டும் சிரிக்க ஆரம் பித்தான். ''நிறுத்து. நிறுத் தேன்!'' முரளியின் மனம் அவனை வேண்டிற்று.

''புளியந்தோப்புக்குப் பக்கத் துத் தெருடா'' என்றான் முரளி. அவனுடைய பேச்சில் ஜீவன் குறைந்திருந்தது.

''ராமுவும் பாலுவும் அந்தப் பக்கத்தில்தானடா இருக்கிறார் கள். ராமு ரொம்ப நல்லவன். பாலு பெரிய கோழை. அவர்கள் எப்பவும் அந்த விளாமரத்தடியில் தான் இருப்பார்கள். இப்பவே நீ போய் அவர்களைச் சிநேகம் பிடித்துக்கொள்ளடா'' என்றான் மணி.

முரளி புறப்பட்டான். ''டேய், நீ இங்கேதானடா இருப்பே? என் பையைப் பார்த்துக் கொள்'' என்று அவனுக்கு ஒரு வேலையும் வைத்தான்.

* * *

விளாமரத்தடியைத் தேடி முரளி போனான். அவனுக்குப் பின் புறமிருந்து ராமுவும் பாலுவுமே அவனை, ''டேய்..டேய்..'' என்று அழைத்தார்கள். அவர்களுக்கு அவன் பெயர் தெரியாதே!

''ஏண்டா, அதோ அந்தக் கிளாஸ் ரூம்லேதான் புத்தகத்தைக் கொண்டு போய் வைத்தாயா?'' என்று ராமு கேட்டான்.

''ஆமாம்'' என்றான் முரளி. அநாவசியமான கேள்வி! புத்த கத்தை வேறே எங்கே வைப்பார் களாம்? இவர்களைப்போல் கையி லேயே சுமந்துகொண்டு திரிவார் களா? முரளி இதையெல்லாம் வாய் விட்டுச் சொல்லவில்லை. மனசுக்குள் நினைத்துக்கொண் டான்.

பாலுவின் முகம் வெளிறிப் போயிற்று. ''வாடா, நாம் போகலாம்'' என்று ராமுவின் கையைப் பிடித்து இழுத்தான் அவன்.

'ஏன், இப்படி இவன் காரணமில்லாமல் நடுங்குகிறான்? மணி சரியாகத்தான் சொன்னான்!' வார்த்தைகள் கொஞ்சம் உரக்கவே வெளி வந்துவிட்டன. ராமு பேசினான். ''எந்த மணி? நீல ஷர்ட்டா? உன்னோடு பேசினானா?'' முரளிக்கு ஒன்றுமே புரியவில்லை.

''ஏன், மனிதன் என்றால் புதிதாக வந்தவனிடம் பேசமாட்டானா? அதிசயமாகக்கேட்கிறாயே!'' என்று கொஞ்சம் கடுகடுப்பாகவே பதிலளித்தான் அவன்.

''மனிதனா? பேய்டா பேய்!'' என்றான் பாலு. குரல் நடுங்கின விதத்தை எப்படித்தான் எழுதுவது?

''பேயாவது, பிசாசாவது, உன்னைப் போல் பயந்தாங்கொள்ளிகளுக்கு நான்கூடப் பேயாகத் தோன்றுவேன். போடா போ!'' என்று அலட்சியமாகப் பேசினான் முரளி. இதென்ன கதை! ஆமாம் கதைதான். ராமுதான் அதைச் சொன்னான். முரளி யோசித்துப் பார்த்தான், அந்தக் கதை நிஜமாக இருக்குமா என்று.

இரண்டு வருஷங்களுக்கு முன்னுல் அந்தச் சம்பவம் நடந்ததாம். மணி, வாத்தியார் ரங்கமணியின் ஒரே அருமை மகன். வகுப்பில் அவனுக்கு முதலிடம். அதாவது போர்டுக்கு எதிரில் வாத்தியாருக்கு வலது பக்கத்தில் வாத்தியார் மகன் மக்கு என்பதைப் பொய்யாக்கிவிட்டு மணி படிப்பிலும் முதலிடம் பெற்ருன். ஆனுல் பாவம்! 'பூ' என்று ஊதினுல் கீழே விழுந்து விடும்படியான நோஞ்சான் உடம்பு.

ஒரு நாள். அப்போதெல்லாம் காலை ஒன்பது மணிக்கே பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது வழக்கம். அன்று முதல் பீரியடே கணக்கு. கணக்கு என்ருல் எல்லோருக்கும் கசப்புதான். ஆனுல் வாத்தியார் ரங்கமணியினுடைய வகுப்பு அது என்னும்போது அந்தக் கசப்பு எங்கோ மறைந்துவிடும். கணக்கு வாத்தியார்களுக்கே உரித்தான அந்தக் கடுகடுப்பு அவரிடம் ஒரு மாத்திரை கூட கிடையாது.

வகுப்பில் ஒரே ஆரவாரம். போர்டைச் சுற்றிப் பையன்களின் கூட்டம்! போர்டில் வழியோடு செய்திருந்த அந்த மாதிரிக் கணக்கைத் தங்கள் தங்கள் இடத்திலிருந்தே எழுதிக்கொள்ள அவர்களால் முடியவில்லையாம்! எவ்வளவுதான் நல்லவராஞலும் இந்த வானரக் கூச்சலை எப்படி ஒருவர் ஐந்து நிமிஷத்திற்குமேல் அதிகம் பொறுத்துக் கொள்ள முடியும்?

ரங்கமணி வாத்தியார் ஓர் அதட்டல் போட்டார். ''போங்கடா இடத்துக்கு. இப்படிக் குறப்பயல்கள் மாதிரி ஏண்டா கத்துகிறீர்கள்?'' அவர் தம் நாற்காலியை விட்டு எழுந்தார். எல்லோரும் அவரவர் இடத்துக்குப் பரபரப்போடு ஓடினுர்கள். அப்போதுதான் யாரும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்துவிட்டது. ஏதோ ஓர் ஒட்டை 'ஸ்டாண்'டின் மீது ஒட்டிக்கொண்டிருந்த அந்தப் பெரிய கரும்பலகை வாத்தியாரின் கை பட்டோ, அல்லது அதற்குப் பின்னுலிருந்து கடைசியாக ஓடின கோபுவின் தலையால் இடிபட்டோ கீழே விழுந்தது. கீழேயா விழுந்தது? ஏனே அங்கே நின்றிருந்த நோஞ்சான் மணிமீது விழுந்தது. மணி மல்லாந்து படுத்தான். அவன்மீது அந்த ராட்சஸப் பலகை கிடந்தது!

பையன்கள் 'ஆ!' என்று அலறினுர்கள். ரங்கமணி ஒரு விநாடி அசைவற்று நின்று விட்டார்-அதன் பின்? பலகை ஒரு மூலையில் சாத்தப்பட்டது. மணியைத் தூக்கி ஒரு பெஞ்சியின் மீது கிடத்தினுர்கள். மூர்ச்சையாகி யிருக்கிருன் என்றுதான் நினைத்தார்கள் முதலில். ஆனுல் வலுவற்ற அவனுடைய இருதயம் எப்போதோ தன் கடமையை நிறுத்தி விட்டது.

வாத்தியார் ரங்கமணி அன்றிலிருந்தே வேலையைவிட்டுவிட்டார். அந்தப் பள்ளிக்கூடம் பக்கமாக அவர் கனவில்கூட நடப்பதில்லை. மணி மட்டும் அந்த வகுப்பறையிலேயே உலவுவதாக வதந்தி. அதுவும் காலை பத்து மணிக்கு முன் அந்த அறைக்குள் யாருமே தனியாகத் துணிந்து நுழைய மாட்டார்கள். ஒன்று சொல்ல வேண்டுமே. இப்போதெல்லாம் காலை பத்து மணிக்குத்தான் பள்ளிக்கூடம் ஆரம்பம்.

* * *

முரளிக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது. செத்தவன் செத்தவன்தானே! அப்புறம் கூட ஆவியாக உலாவுவானே? ராமுவுக்கு அவனுடைய அலட்சிய பாவத்தைக் கண்டு ஒரே கோபம். ''பெரிய தைரியக்காரச் சிங்கம் இவன். போயேண்டா. இப்போது போய் உன் பையைக் கொண்டு வாயேன் பார்ப்போம்'' என்று சவால் விட்டான் அவன். முரளி புறப்பட்டான்.

அறைக்குள் நுழையும்போதே அவன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கால்கள் பின்னின. இருதயம் வெகு வேகமாகத் துடித்தது. உள்ளே மணி அவனுடைய

'ஜாமெட்ரி' பெட்டியை ஆராய்ந்துகொண்டிருந்தான்.

''பேயாவது பிசாசாவது! இவன் வேறு யாராகிலும் உண்மை மணியாக யிருக்கலாம். அவன்.. அவன்..! வாத்தியார் ரங்கமணியின் மகன் என்று சொன்னுன்? இல்லே..இ...ல்..லே.''

''டேய் முரளி. இந்த ரப்பர் நல்லா அழிக்குமோ? முயல் மாதிரி ரொம்ப அழகாயிருக்கிறதே'' என்று மணி பேசினுன். அந்தக் குரல்..எத்தனே கரகரப்பாகக் கடுமையாக ஒலித்தது.

முரளிக்குத் தன்னேயும் தன்னேச் சுற்றியுள்ள எந்தப் பொருளேயுமே உண்மை என்று நம்ப முடியவில்லே. எப்படியோ சமாளித்துக் கொண்டு, ''என் பையைக் கொடுடா'' என்ருன் முரளி. அவன் குரல் அவன் காதிலேயே விழுந்திருக்குமோ, விழுந்திருக்காதோ! ''ஒ..வந்து எடுத்துக் கொள்ளேன். இந்த ரப்பர் மட்டும் எனக்கு'' என்ருன் மணி.

''ஐயோ. இன்றைக்குத்தான் புதிதாக என் அண்ணன் வாங்கித் தந்தான். கொடுத்துவிடேன். அவன் என்னே அடித்துக் கொல்வானே!'' முரளி எல்லாவற்றையும் மறந்து தன் இடத்துக்கு ஓடினுன். ஆனுல் மணி திடீரென்று எங்கே மறைந்தான்? கம்பியில்லா அந்தப் பெரிய ஜன்னலின்மேல் ஒரு கணம் தோன்றியவன் பிறகு வெளிப்புறமாகக் குதித்தான். பறந்தான்! முரளி அதை ஒன்றையும் கவனிக்கவில்லே. பை வேறு, புத்தகங்கள் வேறு, திறந்த ஜாமெட்ரி வேறு என்று அங்கே தனித் தனியாகச் சிதறிக் கிடந்த பொருள்கள் அவனேக் கண்டு நகைத்தன.

தூரத்தில் ஒரு சிரிப்பொலி கேட்டது. இரவில் அலேயோசையோ, புயலில் மரங்களின் சலசலப்போ, வெள்ளத்தின் பேரிரைச்சலோ எதுவுமே இத்தனே பயங்கரமாக இருக்காது.

முரளி எழுந்தான். எல்லாவற்றையும் ஒரே கையில் வாரிக் கொண்டு தலே தெறிக்க எங்கோ ஓடினுன்; ஓடினுன்; கண்ணுக்கு எட்டாத தூரத்தில் ஓடி மறைந்தே விட்டான்.

விளாமரத்தின் பின்புறம் ஒளிந்திருந்த மூன்று உருவங்கள் இப்போது மேலும் சத்தமாகச் சிரித்தன.

''ராமு, நம் நாடகம் எப்படி?'' என்ருன் மணி.

''வெகு ஜோர், நாமெல்லாம் பிறவிக் கலேஞர்களடா. கதையும் நடிப்பும் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நம்மிடத்தில் ஊற்றெடுத்துப் பெருகும். சரி..சரி..அப்புறமாகப் பெருமைப்படலாம். டேய் மணி. என்ன என்ன கிடைத்தது?'' ராமுவின் குரலில் தொனித்த பெருமிதம் மதயானேயை எதிர்த்து வென்ற மாவீரர்களின் குரலிலும் ஒலிக்காது.

மணி தன் நீல ஷர்ட்டின் ஜேபியிலிருந்து ஓர் அழகான பைலட் பேனுவை எடுத்தான். கூடவே ஒரு ரூபாய் நோட்டும் கொஞ்சம் சில்லறையும் கீழே விழுந்தன. ராமுவும் பாலுவும் குனிந்து அவற்றைப் பொறுக்கிக் கொண்டனர்.

மூன்று கயவர்களின் முகமும் அகமும் மலர்ந்த அந்த விநாடியில் ஒரு கோழை எங்கோ போகும் திசைகூட அறியாமல் ஓடிக் கொண்டேயிருந்தான்.

ஆனுல் திடீரென்று ஒரு யோசனே தோன்றவே அவன் ஓட்டம் தடைப்பட்டு நின்றது. நின்ற கால்கள் விளாமரம் இருந்த திசையை நோக்கித் திரும்பி ஓடத் தொடங்கின!

''டேய், போக்கிரிகளா?'' என்று பயங்கரமாகக் கூவினுன் முரளி. பைலட் பேனுவையும் ரூபாய், சில்லறைகளேயும் பங்கு போட்டுக் கொண்டிருந்த நண்பர்கள் அவற்றைப் போட்டுவிட்டு ஓட்டமாக ஓடத் தொடங்கினுர்கள்.

கொடுக்கும் தெய்வம்

'ஆர். ஜயா'

அன்று அந்த ஊரே நித்திரையில் ஆழ்ந்திருந்தது. ஆனால் அந்தத் தெருக்கோடி வீட்டு நாய் மட்டும் தான் விழித்திருப்பதை அடிக்கடி உறுமித் தெரிவித்துக் கொண்டிருந்தது. ராமுவின் தோழன் தான் அந்த நாய். அன்று இரவு அந்த நாயைப் போலவே அவன் உள்ளமும் உறங்காமல் அடிக்கடி எழும்பிச் சிலிர்த்துக்கொண் டிருந்தது.

அவன் உள்ளத்தை அரித்து வந்த வேதனை தான் என்ன? இன்னும் ஒரு வாரத்தில் அவன் S.S.L.C. பரீட்சைக்குப் பணம் கட்டிவிட் வேண்டும். சுளையாகப் பதினைந்து ரூபாய். அவனுக்குஅறிவு தெரிந்ததிலிருந்து கண்டது, தொட்டுப் பார்த்தது, ஒரு ரூபாய் நோட்டு ஒன்றுதான். அதுவும் ஒரே நாள். பாட்டி கொடுத்தாள், மளிகைச் சாமான்கள் வாங்கி வரும்படி. மற்றைய நாட்களிலெல்லாம் அணாக் கணக்கில்தானே அவர்கள் வாழ்க்கை நடைபெறும்!

அன்றாட வாழ்க்கைக்கே அவதிப்படும் ஒரு குடும்பம் (அவனும், பாட்டியும்) பதினைந்து ரூபாய்க்கு எங்கே போவது?

சிந்தித்தான். ஒன்று திருடுவது; மற்றொன்று பாட்டி அடிக்கடி கூறுவாளே; ''ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிடு, அவன் எப்படியாவது படியளப்பான்'' என்று. 'பேத்தல் மொழி!' (அவன் நினைப்பது அப்படித்தான்) அதன்படி ஆண்டவன் மீது போட்டுவிட்டுச் சும்மா இருந்துவிடுவது. இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது? திருடுவது இழிவு. பாட்டி கூறுவதில் நம்பிக்கை இல்லை. சிந்தித்தான், சிந்தித்தான். சிந்திக்கும் மனப்பான்மையும் வற்றிவிட்டது. அதுதான் சமயமென்று நித்திரா தேவியும் அவனை அரவணைத்துக் கொண்டாள்.

ராமு வறுமையான குடும்பத்தில் பிறந்தான். இளம் குழந்தைப் பருவத்திலேயே தாய் தந்தையை ஒருங்கே பறி கொடுத்தான். ஆனால் தாய் வழியில் பாட்டியை மட்டும் விட்டுவைத்ததே கடவுள்! ஆகையால் அவன் 'அதிர்ஷ்டக் காரன்தான்' என்று சிலர் கூறுவார்கள்.

பாட்டி பழைய காலத்துப் பாட்டிதான். ஆனால் படிப்பின் அருமை தெரிந்தவள். ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுத்தான் எந்தக் காரியத்தையும் தொடங்குவாள். ராமுவுக்கும் அதைத்தான் உபதேசித்தாள்.

ராமுவின் விஞ்ஞான ஆராய்ச்சி மனம் அதை ஒத்துக்கொள்ள மறுத்தது. செயற்கைச் சந்திரனையே படைக்கும் ஆற்றலும் - திறமையும் மனிதனுக்கு இருக்கும்போது கண்ணுக்குத் தெரியாத ஆண்டவனை அழைப்பதும், அவன்மீது

பழியைப் போடுவதும், அவன் அறிவுக்கு மடமையாகப் பட்டது.

அவனைப் போன்ற சிறுவர்கள் பணத்திலே புரளும்போது, அவன் மட்டும், 'கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையிற் வறுமை' என்பதற்கொப்ப அவன் வறுமைப் பேயின் பிடியில் சிக்கித் தவிப்பதை எண்ணும்போதும், அதற்குக் காரணமான கடவுளை நினைக்கும்போதும் அவனுக்கு வெறுப்புதான் ஏற்பட்டது.

பாட்டி இரண்டொரு வீடுகளில் வேலை செய்து அதைக் கொண்டு ஜீவனம் நடத்தி வந்தாள். ஆசிரியரின் ஒத்துழைப்பால் சம்பளம் இல்லாது 6-ஆம் படிவத்தை அடைந்து விட்டான் ராமு. வகுப்பில் அவன் முதல் வருவதால் ஆசிரியருக்கு அவன்பால் அன்பு ஏற்பட்டது. புத்தகங்கள் நோட்டுகள் கூட இலவசமாகக் கிடைக்க ஏற்பாடு செய்தனர், அவன் ஏழ்மை நிலையை எண்ணி.

அன்று காலைதான் வகுப்பு ஆசிரியர் கூறினர். ''பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரத்தில் பணம் கட்டிவிட வேண்டும். வீட்டிலே சொல்லுங்கள்'' என்றார். பணத்திலே கொழுத்த சோமுவும் ரவியும் உடனே தம் 'பாக்கெட்'டிலிருந்து ஆளுக்கு இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்து மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மற்றும் சில நடுத்தர வகுப்பினர் பகல் கொண்டுவருவதாகக் கூறினர். வேறு சிலர் மறுதினம் கொண்டு வருவதாகக் கூறினர். ஆனால் ராமுவோ..அப்போதும் ஒன்றும் சொல்லவில்லை. யாரைக் கேட்பது? பாட்டியை அடித்துப் போட்டாலும் பத்து நயா பைசா கூடப் பிறக்காதே. எங்கே போவது? என்ன செய்வது என்ற ஏக்கத்திலேயே அன்றைய இரவு சிந்தனையில் ஆழ்ந்தான்.

மார்கழி மாதக் குளிர்காற்று மெல்லென ராமுவின் உடல் மேல் தவழ்ந்தது. விழித்துக் கொண்டான். காலையாகி விட்டதை உணர்ந்தான். தன் கடமைகளை முடித்துக்கொண்டான். பாட்டியிடம் சொல்வதா, வேண்டாமா? சொன்னால்தானென்ன; 'பகவான் மீது பாரத்தைப் போட்டுவிடு' என்று சொல்லப் போகிறாள். அதைவிட சொல்லாமல் இருப்பதே மேல் என்று தோன்றியது.

பள்ளிக்குச் சென்றான். அவன் எதிர்பார்த்ததைப் போல எல்லா மாணவர்களும் கொண்டுவந்து பணம் கட்டிவிட்டனர் அவனைத் தவிர. ஆசிரியர் ராமுவை ஜாடையாகக் குறிப்பிட்டார். இனிதான் அந்தப் பிரச்னைக்கு முடிவு காண வேண்டும் ராமு.

அடுத்த இரண்டு நாட்கள் பள்ளிக்கு மட்டம் போட்டான். அந்த நேரம் ஊர் சுற்றி வந்தான்.

அன்றும் அப்படித்தான் சுற்றிவிட்டு வீடு வந்தான். ஒரு அதிர்ச்சி அவனுக்காகக் காத்திருந்தது.

''ஏண்டா ராமு! ஏன் நீ பள்ளிக்கு இரண்டு நாட்களாகச் செல்லவில்லை? இன்று பிற்பகல் உங்க வாத்தியார் ஒரு பையனை அனுப்பி உன்னை அழைத்துவரச் சொன்னார். அப்போதுதான் நீ



''பரீட்சையிலே எதுடா கஷ்டமாக இருந்தது?''

''எல்லாம் ரொம்ப ஈசிதான் அப்பா. ஆனா எனக்கு முன்னாலே இருந்தவன் எழுதியிருக்கிறதைப் பார்க்கறதுதான் அப்பா, ரொம்பக் கஷ்டமா இருந்தது.''

‘‘டேய், அம்பி! நான், கிணற்றுக்குப் போறேன். அந்த ரூமுக்குள்ளே போகாதே, அதில் பூச்சாண்டி இருக்கான், பிடிச்சுக்குவான்.

‘‘ஐயையோ’’ எனக்கென்ன? அங்கே இருக்கிற பட்சணத்தை எல்லாம், அவன் தின்னுடப்போறான்!’’

பள்ளிக்குச் செல்லாதது தெரிந்தது’’ என்றாள் பாட்டி. என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. கடைசியில் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சொல்லி முடித்தான், பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டிய விஷயத்தை.

‘‘அப்பாடா! இதற்காகவா இப்படிப் பயப்படுவது? ஆண்டவனை நம்பு. எப்படியாவது அவர் படியளப்பார்: நாளை யாரோ உங்கள் பள்ளிக்கு வரப்போகிறாராம். நீ பேச வேண்டுமாம். ஆகையால் தவறாமல் நாளை பள்ளிக்குப் போ’’ என்றாள் ஒருவித கவலையும் இல்லாது அவள்.

இந்தப் பாட்டிக்குத்தான் என்ன தைரியம்! இன்னொருவராயிருந்தால் வாழ்க்கையில் படும் இவ்வளவு கஷ்டத்திற்குக் கூனிக் குறுகி இருக்குமிடம் விட்டு எழுந்திருக்கக் கூட முடியாமல் இருப்பார். ஆனால் பாட்டியோ அவ்வளவு கஷ்டத்திலும் முகத்தில் புன்சிரிப்பு! நடையில் ஒரு மிடுக்கு! சொல்லில் ஒரு நம்பிக்கை.

‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்ற வள்ளுவர் வாக்குக்குப் பாட்டி உதாரணமாயிருந்தாள்.

மறுநாள் பள்ளிக்குச் சென்றான். பார்வையாளர் சரியாக நான்கு மணிக்கே வந்துவிட்டார். மாணவர் கூட்டத்தின் சார்பிலே ராமு அவரை வரவேற்புரை நிகழ்த்தி உபசரித்தான். பள்ளியைப் பார்வையிட்டபின் அன்று அவர் சென்றுவிட்டார்.

அன்றுதான் ஆசிரியர் குறிப்பிட்ட கடைசித் தினம் பரீட்சைக்குப் பணம் கட்ட. பாட்டியிடம் கூறினான். பாட்டி தாம் வேலை செய்துவரும் வீட்டிலே கேட்டுவிட்டு வருவதாகச் சென்றவள் பகல் ஒரு மணியாகியும் வரவில்லை.

அன்று கட்டவில்லையென்றால் அந்த வருஷம் பட்ட கஷ்டமும் வீணாகிவிடும். என்ன செய்வான்? எத்தனையோ எண்ண அலைகள் எழும்பிக் குதித்துக்கொண்டிருந்தன. கடைசியில் எதிர்பார்த்திருந்த பாட்டியும் ஒருவாறு வந்து சேர்ந்தாள், சோர்ந்த முகத்துடன். அவள் முகத்திலே ஒளிரும் புன்சிரிப்பெல்லாம் எங்கே ஓடி மறைந்தன!

வீட்டு எஜமானர் அன்று காலைதான் வெளியூருக்குப் போனாராம், வேலையின் நிமித்தம். எஜமானியம்மாள் தாம் செலவுக்கு வைத்திருந்த பணத்தில் ஐந்து ரூபாய் தருவதாகக் கூறினாள். இன்னும் தெரிந்த இரண்டொரு இடங்களிலே கேட்டுப் பார்த்தாள். ‘இல்லை’ என்ற விடையுடன் வந்து சேர்ந்தாள் வீட்டிற்கு.

அதைக் கேட்டதும் ராமுவுக்கு அழுகையாக வந்தது.

‘‘அழாதே கண்ணா! எப்படியாவது கடவுள் அருள் புரிவார்! நீ பள்ளிக்குப் போ. நான் வந்து ஆசிரியரிடம் கூறுகிறேன்’’ என்றாள் பாட்டி.

ராமுவின் கோபத் தீ கொழுந்துவிட்டெரிந்தது. கடைசி நிமிஷம் வரை பணத்திற்கு வழி செய்யாத பரமன் இனிமேலா வழி வகுக்கப் போகிறான்?

''பாட்டி! இனிமேல் நீ கஷ்டப்பட வேண்டாம். எனக்காக இது வரை பட்டது போதும். பணம் இல்லாமல் பள்ளிக்கும் செல்லமாட்டேன். இந்த வருடம் போனால் போகிறது. வேலை தேடிப் பணம் சம்பாதித்துக் கொள்கிறேன். அடுத்த வருடம் படித்துக்கொண்டால் போகிறது. நீ ஒன்றும் கஷ்டப்படாதே'' என்று சொல்லிவிட்டு 'விர்'என்று நடையைக் கட்டினான்.

அவன் அப்போதிருந்த நிலையில், எங்கே போகிறானோ? என்ன செய்கிறானோ என்ற பயம் பாட்டியை ஒருமுறை உலுக்கி எடுத்தது.

''ராமு! ராமு! இங்கே வாடா!'' என்று கத்திக்கொண்டே யிருந்தது தான் மிச்சம்.

ராமு வேலை தேடும் வேட்டையிலே ஈடுபட்டான். பி.ஏ; எம்.ஏ; என்று கல்லூரிப் படிப்பும், பட்டமும் பெற்றவர்களெல்லாம் வருடக் கணக்கிலே வேலைக்கு மனுப் போட்டுவிட்டுக் காத்திருக்கும் போது, பள்ளிப் பருவ ராமுவுக்கு-ஒரு நற்சாட்சிப் பத்திரமுமில்லாத ராமுவுக்கு-வேண்டிய பெரிய மனிதர் சிபாரிசு இல்லாத ராமுவுக்கு, யார் வேலை கொடுப்பார்கள்?

ஒரு தெருவா, இரண்டு தெருவா? எத்தனை கம்பெனிகள், கடைகள்? படிகள் ஏறி இறங்கி, கால் வலித்தது தான் மிச்சம்!

சாதாரணமாக, 'பட்டணத்திலே இருப்பவர்களுக்கு வேலைக்கென்ன பஞ்சம்' என்று பட்டிக்காட்டிலே உள்ளவர்கள் நினைப்பார்கள். ஏன் பட்டணவாசி ராமுவே அவ்வாறுதான் நினைத்தான். பட்டணத்துத் தெருக்கள் பல அலைந்த பிறகல்லவா அவன் நினைத்த அளவுக்கு வேலை கிடைப்பது சுலபமல்லவென்று தெரிகிறது.

இரவு ஒன்பது மணிக்கு வீடு திரும்பினான் வெறுப்பு கொண்டு. பாட்டி அவன் வரும் வழியை எதிர்நோக்கி யிருந்தாள்.

''எங்கேடா போய் விட்டாய்? உன்னைத் தேடி நான் எங்கெல்லாம் அலைவது? இன்று இல்லாவிட்டால் நாளை அபராதம் போட்டுக்கூட பணம் கட்டலாமென்றார்களே. நாளை எஜமானர் ஊரிலிருந்து வந்துவிடுவார். அவர் அவசியம் உதவி செய்வார்! வா சாப்பிட்டுவிட்டுப் போய்ப் படுத்துக் கொள்'' என்றாள் பாட்டி.

கவலையில் ஒருவாறு அன்று இரவு கழிந்தது.

காலை பள்ளிக்கூடப் பியூன் வந்து நின்ருன். ''பரீட்சைக்குப் பணம் கட்டவில்லையாமே?பள்ளிக்கூடமும் நேற்று வரவில்லையாம். அதைப் பற்றிப் பேசவேண்டுமாம் உன்னிடம். கையோடு அழைத்துவரச் சொன்னார் தலைமை ஆசிரியர்'' என்ருன்.

நெஞ்சிலே பாறை போட்டு அமுக்கியதைப் போன்றிருந்தது. குற்றவாளியைக் கூண்டிற்கு அழைத்துச் செல்லப்படுவதைப் போல உணர்ந்தான் ராமு. மெதுவாக நடந்தான் பியூனுடன்.

ஆயிற்று; தலைமை ஆசிரியர் அறையை அடைத்துவிட்டான். அவன் வகுப்பு ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர்.

ராமுவைக் கண்டதும் தலைமை ஆசிரியர் கேட்டார். ''இன்னும் நீ பரீட்சைக்குப் பணம் கட்டவில்லையல்லவா?''

ராமுவுக்கு ஒருமுறை 'குப்' பென்று வியர்த்துக் கொட்டியது. ''ஆமாம் சார்! நாளை அல்லது மறுநாளாவது கட்டாயம் கட்டிவிடுகிறேன் சார்! மன்னித்துக் கொள்ளுங்கள் சார்''..நாத் தழுதழுத்தது. மேலே தொடர முடியவில்லை. கண்களின் ஓரத்திலே நீர் முட்டி நின்றது.

தலைமை ஆசிரியர் அதைக் கவனித்தார். ''நாளை மட்டும் எங்கிருந்து கட்டுவாய்? ஏது பணம்?'' என்ருர்.

ராமு நினைத்ததை அவர் கேட்டுவிட்டார். ''பாட்டி வேலை செய்யும் வீட்டில் கேட்டிருக்கிருள். எஜமானர் ஊரில் இல்லை. நாளை தருவதாகக் கூறியிருக்கிருர்கள். அவர் ஊரிலிருந்து வந்ததும்: ஆகையால்..''

''சரி! ராமு நீ அதிர்ஷ்டக்காரன்தான்! அன்று ஒருவர் நம் பள்ளியைப் பார்வையிட வந்தாரே, அவர் ஒரு கனவான் மட்டுமல்ல; தனவானும்கூட. தாய் தந்தை இருவரும் இல்லாத ஏழை மாணவர்களுக்குத் தாம் கல்வி வசதி அளிப்பதாகக் கூறினர். நம் பள்ளியில் பெற்ருேரை இழந்த நால்வரிலே நீயும் ஒருவன். அவர் அன்று போகும்போது உபகாரப் பணமாக நூறு ருபாய்க் கொடுத்துவிட்டுப் போனுர், உங்களுக்குத் தேவையானவற்றை உடனே வாங்கித் தருமாறு. ஆளுக்கு இருபத்தைந்து ரூபாய் கிடைத்தது. பதினைந்து ரூபாய் பரீட்சைக்கு எடுத்துக் கொண்டோம். மிகுதி பத்து ரூபாய் பெற்றுகொண்டு போ. உனக்குத் தேவையான நோட்டுகள் துணிகள் எடுத்துக் கொள். இது மட்டுமல்ல. கல்லூரிப் படிப்புக்கும் உனக்கு இலவச உதவி கிடைக்கும். அந்தக் கனவான் உதவி அளிப்பார். ஆகையால் நன்ருகப் படி'' என்ருர் ஹெட்மாஸ்டர்.

ராமு தான் கேட்பது கனவிலா நனவிலா என்று ஒரு கணம் யோசித்தான். தனக்கு உணர்ச்சி இருக்கிறதா என்று ஒருமுறை கிள்ளிப் பார்த்துக்கொண்டான். வலி எடுத்தது. நடந்தது உண்மை தான் என உறுதி செய்து கொண்டான்.

என்ன செய்வதென்றே தோன்றவில்லை. பாட்டி சொன்ன 'பேத்தல் மொழி' இன்று 'பொன் மொழி'யாகப் பட்டது. கொடுக்கும் தெய்வம் கூப்பிட்டனுப்பி இன்று கொடுத்ததே! இதைப் போய்ப் பாட்டிக்கு முதலில் தெரிவிக்க வேண்டாமா? அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்!

அவ்வளவுதான். சிட்டாகப் பறந்தான் வீடு நோக்கி.

''ராமு! ரூபாயைப் பெற்றுக் கொண்டு போடா'' என்று ஆசிரியர் கூப்பிட்டதுகூட அவன் காதில் விழவில்லை அந்த அவசரத்தில்.

நீங்களும் நானும்

ஆர்வி

ஹ. ரகுராமன், கல்கத்தா-29

கே: கல்கத்தாவில் நடந்த ஆசிய எழுத்தாளர் மகாநாட்டுக்கு ஏன் ஒரிருவரைத் தவிர நல்ல எழுத்தாளர்கள் யாரும் வரவில்லை?

ப: தெரியவில்லை. கல்கத்தாவை அவர்கள் வேறு சந்தர்ப்பங்களில் பார்த்திருப்பார்கள். அல்லது 'பிரயாணச் சலுகை' அவர்கள் வரையில் நீண்டிருக்காது. இரண்டும் இல்லாமல், மகாநாடுகளில் எழுத்தாளனுக்கு என்ன வேலை என்றும் இருந்திருக்கலாம்.

கே. சங்கரன், மதுரை

கே: சட்டசபையில் 'கொறடா' என்றால், என்ன பொருள்?

ப: கிட்டத்தட்ட சட்டசபைச் சட்டாம் பிள்ளை என்று பொருள். அங்கத்தினர்கள் சவாரி செய்யும் சட்டசபையை ஒட்டுவதற்கு உதவியாக இருக்கும் 'சாட்டை' என்று அவரைச் சொல்லலாம். கட்சிக் கொறடாக்கள் தங்கள் கட்சி அங்கத்தினர்களுக்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்துக் கொடுத்து, இன்னின்னார் இவ்வளவு நேரம் பேசவேண்டும் என்று நிர்ணயம் செய்பவர்.

எஸ். ராதாகிருஷ்ணன், பட்டுக் கோட்டை.

கே: சர்வோதயத்தின் குறிக்கோள் என்ன?

ப: உடலில் ரத்தவோட்டம் இருப்பதைப் போல நாட்டின் செல்வம் சமுதாயம் முழுவதும் பரவி யிருக்கும்படி செய்வதே சர்வோதயத்தின் லட்சியம் என்கிறார் வினோபா பாவே.

வி. கணபதி, மதுரை.

கே: சர்வாதிகாரிகள் இப்போது எந்த எந்த நாடுகளில் இருக்கிறார்கள்?

ப: ஸ்பெயினில் ஜெனரல் பிராங்கோ; யுகோஸ்லாவியாவில் மார்ஷல் டிட்டோ; எகிப்தில் கர்னல் நாஸர். ரஷ்யாவில் குருஷ்சேவ். முன் சொன்ன இருவரும் சர்வாதிகாரிகள். பின் சொன்ன இருவரும் சர்வாதிகாரம் செலுத்துபவர்கள்.

பி. கோபிநாத், ஆம்பூர்

கே: நீல வானில் தவழும் ரஷ்ய சந்திரன் போல் என் இதய வானிலே திகழும் கண்ணன் ஆசிரியர் அவர்களே, தயை செய்து என் வினவுக்கு விடையளிக்குமாறு வேண்டுகிறேன்.

ப: ஒன்றுமில்லாத சூன்யத்தில் ரஷ்ய சந்திரன் சுற்றி வருகிறது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். உன் இதயம் அப்படி சூன்யமாக இருக்கிறதா என்பதை முதலில் அறிய விரும்புகிறேன்.

என். வெங்கடராமன், முடிகொண்டான்

கே: இப்பொழுது சென்னை கவர்னர் யார்?

ப: பிரதம நீதிபதி ஜஸ்டிஸ் ராஜமன்னார் அவர்கள் தற்காலிக கவர்னராக இருந்தார். புதிய கவர்னர் விஷ்ணுராம் மேதி.

ம. ரா. செல்லக்குட்டி, மாதம்பட்டி

கே: உலகத்தில் பலம் பொருந்திய நாடு எது?

ப: அதைப் பற்றித்தான் இப்பொழுது அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது. எந்த நாடு அதிகப்பலம் பொருந்தியது என்பது நிரூபணம் ஆகும் பொழுது உலகத்தில் பாதிக்குமேல் அழிந்துவிடும் என்று தோன்றுகிறது.

இ. ஸி. எஸ். குமாரசாமி, கோட்டை (இலங்கை)

கே: இன்பத்திற்கும், துன்பத்திற்கும் ஓர் எல்லை உண்டா?

ப: உண்டு. வாழ்க்கையின் எல்லைதான் அவற்றுக்கும் எல்லை.

ஐ. மொயினுதீன், மதுக்கரை

கே: ரேடியோவின் தத்துவம் என்ன? உலகிலேயே மிகப் பெரிய ரேடியோ நிலையம் எங்கே இருக்கிறது?

ப: வானிலுள்ள ஈதரில் ஒலி அலைகள் சவாரி செய்கின்றன. அந்த ஒலி அலைகளை ஒரு குறிப்பிட்ட கோட்டில் கிரகித்து மீண்டும் அதை ஒலிக்கச் செய்வதுதான் அதன் தத்துவம். ஈதர் கண்ணுக்குத் தெரியாததுபோல் சப்த அலைகளும் காதுக்குக் கேட்கவில்லை. இரண்டும் வான வெளியில் ஓய்வு, ஒழிவு இன்றிச் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. ஓரிடத்திலிருந்து நாம் பேசினால் அந்தப் பேச்சின் ஒலி ஈதரின் உதவியால் முடிவில்லாமல் சஞ்சரித்துக் கொண்டே போகிறது. ஒரு குறிப்பிட்ட உயரத்தில் புறப்பட்டுவரும் ஒலியை ரேடியோ அலை என்கிறோம். கிரகிக்கும் இயந்திரக் கருவிகளின் மூலம் நம் காதுகளில் கேட்கும்படி செய்வதே ரேடியோவின் தத்துவம். உலகில் மிகப் பெரிய ரேடியோ நிலையம் லண்டனிலுள்ள பி. பி. ஸி. நிலையம்தான்.

ஆ. உசைன் அஹமது, தென்காசி

கே' நீங்கள் யாரை விரும்புகிறீர்கள்? யாரை வெறுக்கிறீர்கள்?

ப; நான் முட்டாளை வெறுக்கிறேன். அறிவாளிகளை விரும்புகிறேன்.

எஸ். என். ராதாகிருஷ்ணன், கள்ளக்குறிச்சி

கே: தாய் மொழி, தேசீய மொழி இந்த இரண்டில் எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்?

ப: தாய் மொழிதான். முதலில் தாயைத் தெரிந்துகொண்ட பிறகுதான் குழந்தைக்கு உலகமே தெரிகிறது.

மூளைக்கு வேலை

படம்-1: ஒரு சதுரத்தில் நான்கு நட்சத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் அதை நான்கு சம பாகமாகவும், நான்கு சம உருவமாகவும், ஒவ்வொன்றும் ஒரு நட்சத்திரத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டும். படத்தில் கொடுக்கப்பட்ட கோடுகளின் வழியாகத்தான் கத்தரிக்கப்படவேண்டும். எங்கே, உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

படம் - 2 ஒரு மேஜை விரிப்பு. அது பல துண்டு பட்டுத் துணிகளினால், பல வித வேலைப்பாடுகளுடன் கூடிய ஓர் ஒட்டுத் துணி. அதில் நட்சத்திரம் போன்ற வடிவுடைய ஒரு துண்டு இருக்கிறது. எங்கே அதைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

படம்-1



படம்-2



—எ. கே. வெங்கடேசன், சேலம்.

விடை: வேறு பக்கம்.

பொங்கல் வந்ததே!

தமிழர் இல்லம் உழவர் உள்ளம்
தங்தும் இன்பம் பொங்கவே
அமுதம் பொங்க நமது நெஞ்சில்
அன்பு பொங்க பொங்கவே!

விளைந்த நெல்லை அள்ளி வந்து
வீட்டில் அரிசி ஆக்கியே
களைந்து இட்ட பொங்கல் பொங்கி
களிப்பு ஊட்டும் நாளிதே!

துவியும் செல்வ வளத்தைப்பாடிக்
கூடியாட வந்ததே!
புவியில் எங்கும் மகிழ்ச்சி பொங்க
பொங்கல் இன்று வந்ததே!

—சு. முருகேசன்

யார் இந்த....?

'தேன்மலர்'

எண்ணப் பல வருஷங்களுக்கு முன் ஒரு நாள். மாலைக் கதிரவனின் மறைவினால் துக்கம் அனுஷ்டித்த உலகம். இருளாம் கறுப்பில் மூழ்கிக் கிடந்த நேரம். துறைமுகம் ஒன்று இல்லாததால் அந்தக் கடல் தனது அலைகளை சர்வ சுதந்தரமாய் அடித்துக் கொண்டிருந்தது.

சிறுவர்கள் பத்துப் பதினைந்து பேர்கள். அவர்களுக்குத் தலைவனாக வருபவன் ஓர் அழகிய ஆண். அலைகடலின் அடியில் வந்து நின்றது குழாம். தலைவன் பென் பெருமையுடன் பார்க்கிறான். கடலிலே கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு கப்பலும் தென்படவில்லை. இருட்டில் எப்படித் தெரியும்?

கடலின் இரைச்சலுக்குமேலாகப் பென் தன் குரலை எழுப்புகிறான்: ''ஏண்டா பையன்களா? அதோ அந்தப் பக்கம் கற்கள் குவித்து வைத்திருப்பது ஏன் என்று தெரியுமா?''

''புதிய தளம் ஒன்று அமைக்க என்று அறிவேன்!'' என்று கீச்சுக் குரலில் கூறினான் ஜான். மற்றவர்கள் ஆமோதித்தனர் அதை.

''அப்படியானால் நமக்கு என்று ஒரு தளம் நாம் செய்துகொண்டால் என்ன?'' என்றான் பென்.

''எதற்கு?'' ஒரு கேள்விப் பிரியன் கேட்டான்.

''மீன் பிடிக்க மிகவும் வசதியாய் இருக்குமே!''

''நல்ல யோசனை!''

''—ஆனால் கற்களுக்கு எங்கே போவது?'' என்று புதிய சந்தேகத்தை எழுப்பினான் ஜான்.

பென் அதற்கும் விடையைத் தயாராக வைத்திருந்தான். ''அதோ தெரிகிற கற்களை எடுத்துக்கொண்டால்..'' என்று கூறி முடிக்குமுன் அந்தப் 'பொடிப் பயல்கள்' குழாம் கற்கள் கூட்டத்தை நோக்கிப் படை எடுப்புச் செய்து விட்டார்கள், பின்னால் ஏற்படும் பலனை யோசிக்காமல்!

புதிய தளம் உருவாயிற்று இளைஞர்களின் உதவியால். சிறுவர்கள், அழகாக, வசதியாக மீன் பிடிக்க நல்லதோர் தளம் உருவாயிற்று என்று அகமகிழ்ந்து இல்லம் சென்றனர்.

பொழுது புலர்ந்தது. பெரியோர்கள் தங்கள் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றவர்கள் கற்களைக் காணுமல் திகைப்புற்றனர். புதிய தளத்திற்குப் பதிலாக வேறோர் இடத்தில் 'குட்டித் தளம்' ஒன்று உருவாகியிருப்பது கண்டு வியப்புற்றாலும், புரிந்து கொண்டனர் சிறுவர்கள்தான் அதற்குக் காரணம் என்று.

விசாரணை நடைபெற்றது. பென் பிடிபட்டான். ஜோசையா தனது மகனைக் கண்டித்து மீண்டும் அவ்வளவு கற்களையும் பழைய இடத்தில் போடும்படி செய்தார். சிறுவர் குழாம் மனத்திற்குள் பென்னைத் திட்டிக்கொண்டே கற்களைப் புரட்டிக்கொண் டிருந்தது.

பென் அடைந்த முதல் தண்டனை அதுவே. பின்னர் தனது தமையனின் அச்சகத்தில் அடிக்கடி அடியும் உதையும் பெற்று வேலை செய்திருக்கிறான். பொறுமையின் சின்னமாய் விளங்கிய பென் பின்னர் வெறுப்புற்று பிலடெல்பியா நகருக்கு ஓடியே போனான்.

பத்திரிகை ஒன்றைத் துவக்கினான். பணமும் புகழும் பெற்றான். அடிக்கடி அட்லாண்டிக் கடலைத் தாண்டிய வண்ணம் இருந்தவன், ஒரு முறை பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிஸுக்குப் போயிருந்தான்.

* * *

பாரிஸ் நகரம் அல்லோல கல்லோலப் பட்டது. புதிதாகப் பிரம்மாண்டமான பலூன் ஒன்றை வானவீதியில் பறக்கவிடப் போகிறார்கள் என்று தெரிந்த பின்னரே அறிவாளி என்ற பட்டம் பெற்ற பென் கூட்டத்தோடு கூட்டமாக நின்றார்.

பலூன் பறக்கவிடப் பெற்றது; சில்கினால் செய்யப்பட்ட பலூன் அது. மேகக் கூட்டத்திற்கு முன்னால் அது புள்ளியாக மறைந்து விட்டது. மக்கள், கொட்டும் மழையில் வேடிக்கை பார்த்தாலும், சிரித்து மகிழ்ந்தாலும் பலூனின் உபயோகத்தைப் பாராட்ட விரும்பவில்லை.

''இந்தப் பலூனால் என்ன பிரயோசனம்? வானவெளியில் வீணே சுற்றி வருவதால் யாது பயன்?''

—மக்கள் முணுமுணுத்தனர்.

''புதிய குழந்தை பிறந்தால் யாது பயன்?'' என்று கேள்வி யொன்றைப் போட்டார் பென். யாரும் பதிலளிக்கவில்லை.

"எதுக்குடா அழறே? யார் உன்னை என்ன சொன்னு?"

"கிட்டு வந்து என்னைக் 'குரங்கு மூஞ்சி பிள்ளை'ன்னு எல்லார் கிட்டேயும் சொல்ரும்பா!"

"குழந்தை வளர்ந்தால்தான் பயன்! அதுபோல் இந்தப் பலூனுல் ஏற்படப் போகும் ஆராய்ச்சிகளினுல்தான் பயன். நம்முடைய காலத்தில் பலன் ஏற்படாவிட்டாலும் பிற்காலத்தில் ஆகாய வெளியிலும் கப்பல்கள் போகும்!" என்று ஆணித்தரமாகக் கூறினுர் பென்.

மக்கள் நகைத்தனர். பென் கூறியது இன்று உண்மையாகி விட்டது என்று முழங்குவது போல் நம் தலைக்குமேல் கணக்கற்ற விமானங்கள் போகின்றன.

* * *

ரஷ்யா அனுப்பிய 'ஸ்புட்நிக்' கைப் பற்றியும் பாமர மக்கள் மேற்சொன்ன அபிப்பிராயத்தையே கொண்டிருக்கின்றனர். ஆனுல் பின்னுல் அது உதவும்.

அதை நமக்கு முன்னுலேயே உணர்த்தியவர் பென்.

யார் இந்த பென்?

அவர்தான் பிரபல எழுத்தாளர், விஞ்ஞானி, அச்சகத் தொழிலின் தந்தை—பெஞ்சமின் பிராங்க்ளின்!

மறைந்த அவர் புகழ் ஓங்குக! ..



பரிசுபெற்ற தொடர்கதை:

2. மூட்டையில் என்ன?

சென்னை திருவல்லிக்கேணி பைக்கிராப்ட்ஸ் ரோடிலுள்ள கடை வரிசைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு வந்தால், 'மாடர்ன் ஸில்க் ஹவுஸ்' என்ற பெரிய எழுத்துக்களில் உள்ள 'போர்டு' கண்ணில் படாமல் போகாது. அந்தப் போர்டில் 'நியோன்' விளக்குகளினால் பலவித விசித்திரங்களைச் செய்திருந்தார்கள். அந்தப் பலகையில் வரைந்திருந்த சிறுவனின் படம் நியோன் விளக்குகளினால் கண்ணைச் சிமிட்டியது. சிவப்பு, பச்சை, நீலம் என்று அந்தப் பலகை முழுவதும் ஒரே வண்ண இழைப்பு; அந்தப் பக்கத்திலேயே அதுதான் பெரிய ஜவுளிக் கடை போல் தோன்றும். எப்பொழுது பார்த்தாலும் அங்கே ஜே ஜே என்று கூட்டமாக இருக்கும். உயர்ந்த ரகமான பட்டாடைகள் வீதியில் போவோர் வருவோரை 'வா, வா!' என்று அழைக்கும். அந்த ஜவுளிக் கடைக்கு அடுத்த கடையாக இருப்பது ஒரு பெரிய நகைக் கடை. தங்க நகைகளும் வெள்ளி நகைகளும் அங்கே ஏராளமாகக் கொட்டிக் கிடந்தன. அந்தப் பக்கத்தில் விசாரித்தால் அந்த இரண்டு கடைகளுக்கும் முதலாளி ஒரே நபர்தான் என்று தெரிய வரும். இரண்டு கடைகளுக்கும் நடுவே, அமைந்துள்ள சிறிய சந்து வழியாக உள்ளே சென்றால் அங்கே பெரிய பங்களா இருப்பது தெரியவரும். அந்தப் பங்களாவின் முன் வராந்தாவில் ஒரு ஈஸி சேரில் உட்கார்ந்து பேப்பரைப் பார்த்துக்கொண்டு இருப்பவர்தான் அந்தக் கடைகளின் முதலாளி, பஞ்சநாத முதலியார்.

மாலை வேளை. அவருக்கு நான்கு நாட்களாக ஒரு புதிய கவலை! நான்கு நாட்களுக்கு முன் அவருடைய ஜவுளிக் கடையில் ரூபாய் மூவாயிரம் பெருமான ஜவுளி திருட்டுப் போய்விட்டது. அவருடைய பணத்திற்கு அந்த மூவாயிரம் என்ன! முப்பதினாயிரம்கூட லட்சியமில்லை. ஆனால் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் அவர் எண்ணம். உடனேயே போலீசுக்குத் தகவல் கொடுத்திருந்தார். போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் பட்டாபி அவருக்கு நெருங்கிய நண்பர். அதனால் பட்டாபியிடம் தனிப்பட்ட முறையில் சொல்லி வைத்திருந்தார். திருட்டுக்கு உடந்தையான ஆட்களை

யாரென்று கண்டுபிடித்தாக வேண்டுமே என்ற கவலைதான் மனத்தை உறுத்தியது. மாலை மணி ஐந்தாகிவிட்டதை உணர்ந்து பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தார். காவல்காரன் கூர்க்கா வந்து நின்றான்.

''ஸார்! இன்ஸ்பெக்டர் ஐயா வந்துகிட்டு இருக்கிறார்'' என்றான். சைக்கிளிலிருந்து அதே சமயம் இறங்கி உள்ளே வந்துகொண் டிருந்தார் பட்டாபி.

''வாருங்கள் மிஸ்டர் பட்டாபி!....'' என்று வரவேற்றார் அவர்.

''முக்கியமான சமாசாரம் சொல்லத்தான் வந்திருக்கிறேன்'' என்று புன்னகையுடன் கூறியபடி நாற்காலியில் அமர்ந்தார் பட்டாபி.

''சொல்லுங்கள்....''

''உங்கள் கேஸைப்பற்றிச் சில விவரங்கள் கிடைத்துள்ளன. ஆனால் எல்லாம் மர்மமாகவே இருக்கின்றன. எனக்கே அது இன்னும் சரியாகப் புரியவில்லை. உங்களுடைய ஜவுளிகள் என்று சில உருப்படிகளை இன்று விற்பனைக்கு வந்தவைகளில் கண்டுபிடித்திருக்கிறோம்......''



''அப்பொழுது அநேகமாகத் திருடன் அகப்பட்டுக் கொள்வான்!''

''அவசரப் படுகிறீர்களே!.. ஆனால் அந்த வியாபாரியை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அடையாளம் மட்டும் தெரிய வருகிறது. இதே மாதிரி ஜவுளித் திருட்டு அடிக்கடி எங்கள் பார்வைக்கு வருகிறது—''

முதலியார் கவனமாகக் கேட்டார்.

''..இரண்டு நாட்களுக்கு முன் ஒரு நபர் மேல் சந்தேகம் வந்தது. அந்த ஆள் இருக்கும் இடம்கூடத் தெரிந்து விட்டது. ஆனால் எந்த நிச்சயத்தில் அவனைக் கைது செய்வது என்றுதான் தெரியவில்லை. அடிக்கடி அதே ஆளைக் கூடப் பார்க்கிறேன். கடைத் தெருவில் கறுப்புக் கண்ணாடி ஒன்று அணிந்துகொண்டு குட்டையான ஒரு ஆள், ஒரு மாதிரி ஸ்டைலாக நடப்பான். கையில் எப்பொழுதும் ஒரு சாவியைச் சுற்றிக்கொண்டு போவான்.''

''அவனா? நான்கூடப் பார்த்திருக்கிறேன். அவனையா நீங்கள்..?'' என்றார் முதலியார்.

''நான் தீர்மானிக்க வில்லை. அவனைப்பற்றிய பல தகவல்கள் வந்துள்ளன. அந்தத் தகவல்கள் படி தீர்மானித்தால் அவன் ஒரு கஜப்போக்கிரியாக இருக்க வேண்டும்.''

''என்னமோ, பாருங்கள் மிஸ்டர் பட்டாபி...''

''அவன் சகாக்களுக்கு எழுதிய சில கடிதங்களைக் கைப்பற்றியிருக்கிறேன். அதோடு மட்டுமா? அவனுடைய சின்ன இரும்புப் பெட்டி வேறே கிடைத்திருக்கிறது.''

''இன்னும் என் பையன் ஸம்பத்தைக் கூட ஒரு ஆளைக் கவனிக்கச் சொன்னேன். அவனும் ஏதேனும் விஷயம் சேகரித்திருப்பான்...''

''அதே கறுப்புக் கண்ணாடி மனிதனைத்தான் கவனிக்கச் சொல்லி யிருக்கிறீர்களா?''





"இல்லை. இந்த ஆள் வேறு. அநேகமாக இவன் அவனுக்கு உடந்தையாக இருக்கலாம்..."

பட்டாபி மணியைப் பார்த்தார். மணி ஏழரை ஆகிவிட்டிருந்தது.

"இதோ விசாரித்துச் சொல்கிறேன். பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே போனை எடுத்து ஸம்பத்தை அழைத்தார். முதலியாருக்கு அந்தச் சம்பாஷணை கேட்கவில்லை. பட்டாபியின் முகம் மாறுதலடைந்ததை மட்டும் கவனித்தார். ரிஸீவரைக் கீழே வைத்ததும், "என்ன! மிஸ்டர் பட்டாபி! என்ன..என்ன" என்று பதற்றத்துடன் கேட்டார் முதலியார்.

"என்னவா?...அந்த இரும்புப் பெட்டி போய்விட்டது."

"எந்த இரும்புப் பெட்டி?"

"அதுதான்! அந்தக் கடிதங்கள். தடயங்கள் நிறைந்த பெட்டி தான்.."

"ஐயையோ! எப்படி?"

"ஸம்பத் ஏமாந்து போய் யாரிடமோ அதை எடுத்துக் கொடுத்து விட்டானாம்!"

"அடடா!...."

"எதிரி கெட்டிக்காரன்தான் முதலியார்! இனிமேல் சும்மா இருக்க முடியாது. சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும். நீங்கள் கவலைப்படாதீர்கள்." பட்டாபி எழுந்து விட்டார் ரோசமாக.

அவர் எழுந்து கிளம்பிய பொழுதும் முதலியார் அசையாமல் கலங்கிப்போய் உட்கார்ந்திருந்தார். பட்டாபி கிளம்பிப் போய்க்கொண்டிருந்தார். அதே சமயம் பின் கட்டிலிருந்து முதலியாரின் மூத்த மகன் பத்து வயதுப் பையன் ஓடிவந்தான். "அப்பா! மாடிக்கு வாருங்கள்" என்று கலவரத்துடன் சென்றான்.

"என்ன, என்ன?" என்றார் முதலியார்.

"பெரிய இரும்புப் பெட்டி திறந்து கிடக்கு, ரூபாய் நோட்டெல்லாம் இறைஞ்சு கிடக்கு."

முதலியார் பரபரப்புடன் திரும்பி, "ஸார்! ஸார்! ஸப் இன்ஸ்பெக்டர் ஸார்!" என்று அவசரமாகக் கூப்பிட்டார். பட்டாபியும் அவருடைய நடுங்கும் குரலைக் கேட்டு ஓடிவந்தார். எல்லோரும் மாடிக்கு விரைந்தார்கள். மாடியறையில் பெரிய இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. பணமெல்லாம் இறைந்து கிடந்தன. ஒரு தட்டு முழுவதும் காலி! முதலியார் கைகளை உதறினார்.

"ஸார்! இன்ஸ்பெக்டர் ஸார்! போச்சு ஸார்!" என்று அலறினார்.

"இருங்கள்! அவசரப்படாதீர்கள்; பார்க்கலாம்!"

"அதோ, அந்த இரும்புப் பெட்டியில் என்ன?"

"நல்ல வேளை ஸார்! அதைத் திறக்கவில்லை. அதில்தான் வைர நகைகள்.." முதலியார் மூச்சு வாங்கினார். அதற்குள் அங்கே ஒரேயடியாகக் கூட்டம் கூடிவிட்டது. வீட்டு வேலைக்காரர்களெல்லாம் ஓடிவந்தார்கள். ஸப் - இன்ஸ்பெக்டர் எல்லோரையும் போகச் சொன்னார். "இந்தா, இந்தக் கூர்க்கா எங்கே போய் விட்டான்?"

"இதோ வந்து விட்டேன்" என்று முன்னால் வந்து 'ஸல்யூட்' அடித்தான் அவன்.

"எல்லோரையும் போகச் சொல்" என்றார் பட்டாபி.

"எப்படி ஸார், வந்திருப்பான்? அதுவே புரியவில்லையே" என்றார் முதலியார்,

''எனக்கும்தான் புரியவில்லை. எங்கே பார்த்தாலும் நன்றாகக் கம்பி போட்டிருக்கிறீர்கள். அதைத் தவிர கதவும் எவ்வளவு ஸ்டிராங்காக இருக்கிறது! ஜன்னல் கதவு கூட மூடியிருக்கிறது. எப்படித்தான் வந்தான்! இங்கே வர வேறு வழி ஏதானும் இருக்கிறதா முதலியார்?''

''ஒன்றுமே இல்லை. மாடிப்படி வழியாக வந்தால்தான்.''

''கடைசியாக நீங்கள் எப்பொழுது இங்கே வந்தீர்கள்?''

''நான்கு மணிக்கு வந்து இருக்கிறேன். யாருமே போயிருக்க முடியாது, மாடி வழியாக. நான்தான் இங்கே இருந்தேனே...''

ஸப் இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்குப் போன் செய்தார். நான்கைந்து கான்ஸ்டபிள்கள் பத்து நிமிஷங்களில் பறந்து வந்தார்கள்.

''முதலியார்! யாரும் மாடிக்குப் போகக்கூடாது. இன்று இரவு விசாரணை நடந்தாக வேண்டும். இந்தத் திருடனைக் கண்டுபிடிக்காவிட்டால் நான் பட்டாபி இல்லை. நிச்சயம்.'' அவர் சொல்லி முடித்ததும் அதை ஆமோதிப்பது போல் டங்...என்று ஹாலில் இருந்த கடிகாரம் 8½ அடித்து ஆமோதித்தது.



* * *

அதே சமயம் தியாகராய நகரிலிருந்த பட்டாபியின் பங்களாவிலிருந்து ஒரு மோட்டார் சைக்கிள் படபடவென்று சத்தமிட்டுக்கொண்டு கனவேகமாகக் கிளம்பியது. அதில் அமர்ந்திருந்த இருவரும் ஸம்பத்தும் ஸ்ரீதரனும்தான்! மிகுந்த கலவரத்துடனிருந்தார்கள். ஸம்பத்திற்கு ஆவேசம் வந்து விட்டதோ என்றுகூட ஸ்ரீதரன் நினைத்தான். அவ்வளவு அவசரப்பட்டான். சரியாகக் கூட அவன் சாப்பிடவில்லை.

''ஸ்ரீதரா! இன்று ராத்திரி தூக்கம் கிடையாது. தயவுசெய்து என்னுடன் வா!'' என்றான்.

ஸ்ரீதரனுக்கும் ஓர் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. திருவல்லிக்கேணி போகும் பெரிய ரஸ்தாவில் அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். ஜனக் கூட்டத்தையெல்லாம் அந்த மோட்டார் சைக்கிள் லக்ஷியம் செய்யவில்லை. ஸ்ரீதரனுக்கு அவன் எங்கே போகிறான் என்றே தெரியவில்லை. மோட்டார் சைக்கிள் வேகம் குறைந்து ஓர் ஒற்றைக்கடை வாசலில் வந்து நின்றது.

அந்தக் கடையின் வாசலில் சிகரெட் பற்றவைத்துக்கொண்டு இருந்த ஓர் ஆளை விசாரித்தான் ஸம்பத்.

''இந்தப் பக்கம் சைக்கிளில் ஒரு கான்ஸ்டபிள் பெட்டியை எடுத்துக் கொண்டு போனாரா?''

''இல்லீங்களே..'' கையை விரித்தான் அவன். மறுபடியும் மோட்டார் சைக்கிள் கிளம்பியது. ஸ்ரீதரன் கேட்டான்.

''ஸம்பத்! அந்தப் போலீஸ்காரன் சைக்கிளில் வரவில்லை....நடந்துதான் வந்தான்...''

''பலே! ஸ்ரீதரன்! நீயும் கவனிக்கிறாயா?....ஆனால் ஒன்று. நாம் வீட்டை விட்டுக் கிளம்பும்போது, திருப்பத்தில் ஒரு ஆள் சைக்கிளைக் காணவில்லை என்று அலறிக்கொண்டிருந்தான் இல்லை?....கூட்டமாகக் கூட இருந்ததே?''

''ஆமாம், ஆமாம்!'' என்றான் ஸ்ரீதரன். ஸம்பத்தை அவன் மனம் வியந்துகொண்டிருந்தது. மோட்டார் சைக்கிள் இப்பொழுது குறுகிய சந்தில் போய்க்கொண்டிருந்தது. அங்கே அதிக ஜன நடமாட்டம் இல்லை. ஒரே ஒரு ஆள் மட்டும் தலையில் ஒரு மூட்டையுடன் ஒதுங்கி நின்றான். ''இங்கே

36-ஆம் நம்பர் வீடு எங்கே..?'' ஸம்பத் கேட்டான்.

''...அ...து...அது வந்து எங்க..வீடு ஸார்.''

''அடேடே உங்க வீடா?..''

''இல்லே இல்லே....என்ன கேட்டிங்க? 36...முப்பத்தாறு.. எங்க வீடு இல்லே எங்க வீடு இந்தப் பக்கமே இல்லே....'' அவனுடைய கைகள் தாளம் போட்டுக்கொண்டிருந்தன.

''அது சரி..நீ யாரு?''

''நான்தான்..வந்து.. பேரு.. சுப்பு, சார்..''

''சரி சுப்பு!..எங்கே போறே இப்ப....?''

''நான்..—வீட்டுக்குத்தான்''

''என்ன அது, மூட்டையிலே?''

''அது யாருக்குன்னு..ஸார்.. தெரி ஓகோ! இதுவா?......

......இது பூரா பாத்திரம்..''

''என்னப்பா இது! பாத்திரம் இருக்கிறதாத் தோணல்லேயே?''

''ஆமா ஸார்! சித்தப்பா வீட்டிலிருந்து கொண்டு வறேன்.''

ஸம்பத் ஒரு கணம் யோசனை செய்தான்.

''சரி வீட்டுக்குப்போ..நானும் உங்க வீட்டுக்கு..''

''ஹி! ஹி; என்ன ஸார்?''

''போ போ! எனக்குக் குடிக்கத் தண்ணீர் கொடு....''

எப்படியோ அந்த அசடு சம்மதித்தது.

நான்கைந்து வீடுகள் தள்ளி ஒரு வீட்டுக்குள் போனான் அவன். ஸம்பத்திற்குச் சந்தேகம் அதிகமாகி விட்டது. ஸ்ரீதரன் பேசாமல் அவனைத் தொடர்ந்தான். யாரோ ஓர் அம்மாள் உள்ளே இருந்து வந்தாள்.

''சுப்பு! பாத்திரத்தை இப்படி வை. இவர்களெல்லாம் யாரு?....''

''நமக்கு வேண்டியவங்கதான். இருங்க, இந்த மூட்டையை மாடியிலே வைக்கிறேன்..'' என்று மாடிக்கு ஓடினான் சுப்பு.

ஸம்பத் வீட்டின் நம்பரைப் பார்த்தான். அங்கே 36 என்று இருந்தது.

ஸம்பத்தும் ஸ்ரீதரனும் தண்ணீரை வாங்கிக் குடித்தார்கள். சுப்பு மாடிக்குச் சென்று ஐந்து நிமிடங்கள்கூட ஆகியிருக்காது. மாடியில் ஏதோ சந்தடி கேட்டது. அதைத் தொடர்ந்து ''ஐயோ! ஐயோ!'' என்று சுப்புவின் அலறல்! 'தடார் திடீர்' என்ற சத்தம்! ஸம்பத் மாடிக்குச் செல்ல முயற்சிப்பதற்குள் மாடிப்படிகளில் சுப்பு உருண்டு உருண்டு கீழே வந்துகொண்டிருந்தான்!....

(தொடரும்)

மூளைக்கு வேலை — விடை



நூற்றுக் கணக்கான வேலை ஆட்களுக்கு நடுவே கிழவன் கையில் சாட்டையுடன் வேலை வாங்கும் காட்சியை, காட்டு மிராண்டித் தலைவன் மகள் மறைவில் நின்று கவனிக்கிறாள்.
உம்! ஆகட்டும்!
காட்டு மிராண்டித் தலைவன் மகள் தன் பின்னால் நிற்கும் இளவரசியைப் பார்த்து திடுக்கிடுகிறாள். . . . . . .
ஹா!
இதெல்லாம் உனக்குப் பிடிக்க வில்லை, இல்லையா?
இளவரசி தலைவன் மகளைச் சமாதானப்படுத்துகிறாள் . . . .
கவலைப்படாதே! கடற்புலியை உன் அண்ணன் போல எண்ணிக்கொள்!
காட்டு மிராண்டித் தலைவன் மகள் சிறிது யோசித்து விட்டு, இளவரசியுடன் உலாவச் சென்றாள்.

(தொடரும்)

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE [illegible] L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

பேனா நண்பர்கள்

1. எஸ். ராஜகோபாலன், 21/117, லோடி காலனி, புதுடில்லி,
2. என். சந்திரசேகர், 23-B சர்தார் சங்கர் ரோடு, கல்கத்தா-29.
3. ஆர். வேங்கடாச்சாரி, 3/2, டங்கன் ரோடு, கர்க்கி, புனா-3.
4. ஸி. வி. ஸ்ரீநிவாஸமூர்த்தி, C/o ஸி. எஸ். வேங்கடரமணி ஐயர், மூன்று படிவம், கார்ப்பரேஷன் உயர்நிலைப்பள்ளி, சென்னை-6.
5. ஆர். ராதாகிருஷ்ணன், 43-A, பிள்ளையார் கோயில் தெரு, வன்னியர்பாளையம், கடலூர், என். டி.
6. எஸ். பாலசுப்பிரமணியன், 4, அரசிப்பாளையம் வீரராகவ செட்டித் தெரு, சேலம்-2.
7. ச. சிவஞானம், ஐந்தாம் படிவம், உயர்நிலைப்பள்ளி, வெண்ணந்தூர் போஸ்டு, சேலம் ஜில்லா.
8. பி. டி. ஜி. ராஜு, 9/4 க. புதூர், இடைப்பாடி போஸ்டு, சேலம் ஜில்லா.
9. எஸ். முகம்மது இப்ராஹீம், 18, செல்லபாச்சா தெரு, ஈரோடு, கோவை ஜில்லா.
10. தெ. ஈசுவரன், 8, பெரைரா பிளேஸ், காலேஜ்தெரு, கொழும்பு-
11. 13. கோ. ராமநாதன், 74, கடற்கரைத் தெரு, கொழும்பு-11.
12. மு. சி. ஸ்ரீகாந்தன், 'ரதிஸ் ரான்', ஸ்டேஷன் ரோடு, கொக்குவில், (இலங்கை)

(பெண்கள் மட்டும்)

13. கே. முத்துலக்ஷ்மி, D/o ஆர். கிருஷ்ணன், 1-A, ராம்நகர், புதுடில்லி.
14. வி. எல். ருக்மிணி, G/184 (G. Type), கிழக்குவிநயநகர், புதுடில்லி.
15. எஸ். கல்யாணி, எல். எஸ். 7. யூனிட்-5, கோரக்பூர், மேற்கு வங்காளம்.
16. ஆர். சுலோசனா, C/o ராமசாமி ஐயர், கடாச்சபுரம் போஸ்டு, (வழி) உடன்குடி, நெல்லை ஜில்லா.
17. பி. ராஜி, C/o P. நடராஜன், பஜார், போஸ்டாபீஸ் ரோடு, உடன்குடி, கிறிஸ்டியா நகரம் போஸ்டு, நெல்லை ஜில்லா.

கண்ணன் கிளைக் கழகம்

செவ்வாய்பேட்டை
சேலம்-2.

உபதலைவர்: கே. கே. துளசிராமன்
காரியதரிசி: எம். குப்புசாமி
பொருளாளர்: டி. கே. பாலசுப்பிரமணியன்

புதிய ஆண்டின் நிர்வாகிகள் மேலே கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 'அம்பு' என்ற கையெழுத்துப் பத்திரிகைக்கு வரும் தமிழ் வருஷப் பிறப்புடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாவதால் வருஷப் பிறப்பு அன்று விசேஷ இதழ் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இதழுக்கு 20-3-58-க்குள் அன்பர்கள் கதைகள் எழுதி அனுப்பலாம். நல்ல கதைக்குப் பரிசாக கண்ணன் ஒரு ஆண்டுச் சந்தாவோ, வெளியீடு புத்தங்களாகவோ அளிக்கப்படும். கதை அனுப்ப வேண்டிய முகவரி: கே. கே. துளசிராமன், C/o திரு வி. சுப்பையா, பி. ஏ., பி. எல்., அட்வகேட், சேலம்-2.

(Regd as a Newspaper in Ceylon.) Regd. No. M. 554

கண்ணன் வெளியீடுகள்

தங்க மாம்பழம் - 'ராஜி' ரூ. 2·00

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்புதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

சைனா சு-சூ! - ஆர்வீ ரூ. 1.50

பிளாட்பாரத்திலே பத்திரிகைகள் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனா சு-சூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

மஞ்சள் பங்களா - ஜி. ஜயராமன் ரூ. 1·00

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி ந. பைசா 40

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்கு கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.